இந்திய வானிலை துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்

## வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை - 09.09.2015

**மாநிலத்தின் கடந்த வார வானிலை**

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 30°செ முதல் 37°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 22°செ முதல் 28°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல் நேர வெப்பநிலை 18°செ முதல் 21°செ ஆகவும், இரவு நேர வெப்பநிலை 11°செ முதல் 13°செ ஆகவும் பதிவானது.

**வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (09.09.2015 முதல் 13.09.2015)**

**1. மேற்கு மண்டலம்**

மேற்கு மாவட்டங்களான கோயமுத்தூரில் வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 24°செ ஆகவும், காலை நேர காற்றின் ஈரப்பதம் 73-76 சதவிகிதமாகவும், மாலைநேர காற்றின் ஈரப்பதம் 64-69 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 12 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தெற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- ✓ வரும் ஐந்து நாட்களுக்கு இலேசான மழை எதிர்பார்க்கபடுகிறது. வட கிழக்கு பருவ மழை கால விதைப்பிற்கான நிலங்களை தயார் செய்யவும்.
- ✓ மழை எதிர்பார்க்கப்படுவதால் இறவை மரவள்ளி கிழங்கு நடவு செய்வதற்கு இதுவே உகந்த தருணமாகும். நடவு செய்யும் மரவள்ளிக்கிழங்கின் கரணைகள் 15 செ.மீ நீளமும் 8 முதல் 10 கணுக்கள் உள்ளனவாகவும், மேலும் தண்டின் நடுப்பகுதியில் வெட்டப்பட்டவையாகவும் இருக்க வேண்டும். கரணைகளை நடவு செய்வதற்கு முன்பு 1 கிராம் கார்பன்டசிம் மருந்தினை1 லிட்டர் தண்ணீரில் கலந்து 15 நிமிடம் ஊற வைக்கவும்.
- ✓ மழையுடன் காற்றின் வேகம் மணிக்கு 12கிமீ அளவில் வீசும் என எதிர்பார்க்கப்படுவதால் 5 மாதங்களான வாழை மற்றும் கரும்பு பயிர்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- ✓ போதிய எண்ணிக்கையிலான பயிர்களை பராமரிக்க இறவை பருத்தி மற்றும் மக்காச்சோள பயிரில் அதிகமாக உள்ள செடிகளை கலைத்து, முளைக்காத இடங்களில் விதைக்கவும்.

**2. காவிரி டெல்டா மண்டலம்**

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர், அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் இலேசான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 32°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 25°செ முதல் 27°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 65 முதல் 84 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 14 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ சம்பா வயல்களில் நேரடி விதைப்பு செய்யும் முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் கலந்து விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- ✓ சம்பா நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்சல்பேட், 15 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். சம்பா நடவிற்கு முன் ஒரு ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம் புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- ✓ குறுவை நெற்பயிரில் பூக்கும் பருவத்தில் கருப்பு நாவாய் பூச்சி தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புரோபனோபாஸ் 50 இ.சி. மருந்தினை ஏக்கருக்கு 400 மில்லி என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**3. தெற்கு மண்டலம்**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர் மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் அதிகமான மேகமூட்டத்துடன் காணப்படும். தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 30°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை $25^0$செ முதல் $27^0$செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 58 முதல் 92 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 5 கி.மீ முதல் 25 கி.மீ வேகத்திலும் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மானாவாரியில் டிராபிகல்டர் என அழைக்கப்படும் விதைப்பு கருவியை பயன்படுத்தி ஆழச்சால் அகலப்பாத்தி அமைத்தல், அடியுரமிடுதல் மற்றும் விதைத்தல் ஆகிய மூன்று செயல்களையும் ஒரே நேரத்தில் செய்து முடிக்க முடியும்.
- ✓ மானாவாரியில் மண் மற்றும் ஈரத்தை பாதுகாக்க ஆழச்சால் அகலப்பாத்திகள், பகுதிப்பாத்திகள் மற்றும் பார்கள் போன்ற முறைகளை பின்பற்றி நிலம் தயாரிக்கவும். கருவிகளை பயன்படுத்தி குறைந்த அளவு நேரத்தில் அதிக பரப்பளவில் வேலைகளை செய்து முடிக்கமுடியும்.
- ✓ மானாவாரியில் சரியான சமயத்தில் விதைக்க ஏதுவாக விதைகள், விதைநேர்த்தி செய்ய பயன்படுத்தப்படும் மருந்துகள், இயற்கை உரங்கள் மற்றும் செயற்கை உரங்கள் போன்ற இடுபொருட்களை வாங்கி தயார்நிலையில் வைத்திருக்கவும்.
- ✓ மானாவாரியில் வரும் வடகிழக்கு பருவமழை பருவத்தில் பயிரிட பயிர் சாகுபடி பருவத்தில் ஏற்படும் வறட்சியை தாங்கி பூச்சி மற்றும் நோய்த்தாக்குதலை எதிர்த்து வளரும் இரகங்களை தெரிவு செய்யவும். பருத்தியில் KC 3, மற்றும் PA 255, மக்காச்சோளத்தில் CoH(M) 6, சோளத்தில் K 8 மற்றும் K 12, பாசிப்பயிரில் CO 6, சூரியகாந்தியில் CO 4, கம்பில் CO(Cu) 9, எள்ளில் TMV 3, கொத்தமல்லியில் CO 4, சென்னாவில் KKM 1 ஆகிய இரகங்கள் மானாவாரிக்கு உகந்தவை.
- ✓ வரும் தினங்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுவதால் காய்க்கும் பருவத்திலுள்ள தக்காளி மற்றும் மிளகாய் போன்ற பயிர்களுக்கு நீர்ப்பாசனம் செய்வதை தவிர்க்கவும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 12°செ முதல் 13°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேர காற்றின் ஈரப்பதம் 84 முதல் 91 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 5 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ மாவட்டத்தில் அடுத்த ஐந்து நாட்களுக்கு ஒரு சில இடங்களில் லேசானது முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுகிறது.
- ✓ பெய்து வரும் மிதமான மழையை பயன்படுத்தி, காபி மற்றும் தேயிலை நாற்றுக்களை, தோட்டக்கலை துறையில் மானிய விலையில் பெற்று நடவு செய்து பயனடைய வேண்டும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் மேகமூட்டத்துடன் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 32°செ முதல் 33°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 25°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 64 முதல் 85 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகமானது 4 கி.மீ முதல் 8வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தற்போது கிடைத்த தென்மேற்குப் பருவமழை மற்றும் காற்றின் வேகம் காரணமாக வெப்பநிலை குறைந்துள்ளதால் முட்டைக்கோழிகளின் தீவன எடுப்பு அதிகரித்துள்ளது. எனவே சற்று கூடுதலான தீவனம் மற்றும் முட்டை உற்பத்தியின் அளவு அதிகரிக்கும்.
- ✓ காற்றின் ஈரப்பதம் காரணமாக சேமித்து வைத்துள்ள மூலப்போருட்களின் விஷ நுண்ணுயிர்களின் வளர்ச்சி இருப்பதற்கு வாய்ப்புள்ளதால் எனவே மூலப்பொருட்களை பரிசோதித்து பயன்படுத்த வேண்டும்.

**6. வடகிழக்கு மண்டலம்**

அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 36°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23°செ முதல் 26°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 68 முதல் 92 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 7 கி.மீ வரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ இளம் கன்றுகள் மற்றும் ஆட்டுக்குட்டிகளை மழையில் நனையாதவாறு பாதுகாக்க வேண்டும்.
- ✓ உழவர்கள் தங்கள் கால்நடைகளை ஏரி அல்லது குளத்தின் அருகில் புற்களை மேயவிடாமல் பாாத்துக்கொள்வதன் மூலம் தட்டைப்பழுக்களின் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.

- ✓ மழைக்காலத்தின் போது புதியதாக வளர்ந்த புற்களை இளம் கன்றுகள் மேயும்போது கழிசல் ஏற்பட வாய்ப்புள்ளது. அத்தருணத்தில் அருகில் உள்ள கால்நடை மருத்துவரை அணுகி அதற்கு தேவையான மருந்தினை அளிக்க வேண்டும்.
- ✓ அதிக ஈரப்பதமும் வெப்பமும் ஒட்டுண்ணிகள் மற்றும் ஈக்களின் பெருக்கத்தை அதிகப்படுத்தும். எனவே உழவர்கள் முறையாக கொட்டகையை சுத்தம் செய்து கால்நடைகளின் சாணத்தை மூடி எருக்குழியில் சேரிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் ஒட்டுண்ணிகளால் நோய் பரவுவதை கட்டுப்படுத்தலாம்.
- ✓ நெற்பயிரில் இலைப்புள்ளி நோயின் தாக்கம் பாயப்படால் மேன்கோசெப் என்ற மருந்தை ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் என்ற அளவு கலந்து 15 நாட்கள் இடைவெளியில் 2 அல்லது 3 முறை தெளிக்க வேண்டும்.
- ✓ வெண்டை செடியில் வெள்ளை ஈ தாக்குதல் காணப்பட்டால் ஒரு எக்டருக்கு மீத்தேன் டேமட்டான் 2 மிலி அல்லது டைமித்தியேட் 2 மிலி என்ற பூச்சிக்கொல்லி மருந்தினை கலந்து தெளிக்க வேண்டும்.
- ✓ மிளகாய் செடியில் காய் துளைக்கும் வண்டுகளை கட்டுப்படுத்த இனகவர்ச்சி பொறிகளை ஒரு எக்டருக்கு 5 என்ற அளவில் வைக்க வேண்டும்.

**7.அதிக மழை பெறும் மண்டலம்**

வரும் நாட்களில் வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான தூறல் மழை எதிர்பார்க்கப்படுகிது. பகல்நேர வெப்பநிலை 30 - 31$^{0}$செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 23-24$^{0}$செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 84 முதல் 86 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் மணிக்கு 8 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- ✓ தோட்டக்கலை பயிர்களில் பயிர்பெருக்க முறைகளை மேற்கொள்ள வேண்டும்.
- ✓ வாழை பயிரில் நோய் பரவாமல் தடுக்க தொடுநச்சு மற்றும் ஊடுருவிபாயும் பூஞ்சாண கொல்லிகளை கலந்து தெளிக்கவேண்டும்.
- ✓ மிளகு, கிராம்பு, ஜாதிக்காய் மற்றும் இலவங்கப்பட்டை செடி, மரங்களில் மழை நீர் சேகரிக்க ஏதுவாக பாத்திகள் அமைக்கவேண்டும்.


**பேராசிரியர் மற்றும் தலைவர்**
**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்**
**கோவை - 3**